**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 86 /2017</u>**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 10 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வனஜா | தொழில் | | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| த/பெ. | : | நெடுமாறன் | ஊர் | | தஞ்சாவூர் |
| வயது | : | 66/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**<u>28.04.2026</u>**

**<u>2வது எதிரி இறப்பு, 5 வது எதிரி ஆஜர். 2,3, 4 எதிரிகள் ஆஜரில்லை.கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் இறுதியாக தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

2) நான் கடந்த 2016 ஆம் ஆண்டு திருவையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது, 28.04.2016ம் தேதி 19 மணிக்கு திருச்சி , காட்டுர், பாப்பாகுறிச்சியை சேர்ந்த மேகலா என்பவர் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் Crl.OP 4625/2015ல் பெற்ற உத்தரவு தபால்மூலம்பெறப்பட்டு, புகார் பரிசீலிக்கப்பட்டு அதன் தன்மைக்கேற்ப காவல் நிலைய குற்ற எண்.3/2016, ச/பி. 498(A), 494,506(1) இதச கீழ் 1முதல் 4 எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தபால் மூலம் பெறப்பட்ட இந்த சம்பவம் தொடர்பான புகாரை தவிர வேறு எந்த புகாரும் எங்கள் காவல்நிலையத்தில் புகார்தாரரால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் மட்டுமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றும் உயர் நீதிமன்ற உத்தரவை அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 உண்மைக்கு மாறாக புகார்

கொடுத்துள்ளார் என்றும் அதனை விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.